முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 665**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.07.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அறமெனும் வேலியாய் கலியுகத்தின்
அன்னதான சேவையாற்றி அருளுகின்ற
வரம்பெற்ற ஆறுமுக அரங்கனே
வள்ளலே கலியுகத்தின் மாதவசியே
2. தவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தக்க ஞான அறிவுரை ஆசி தன்னை
அவனியில் பிலவ நள்ளி திங்களில்
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
3. இனிதே அரங்கன் பலம் இந்த உலகம் அறிய
இந்த கலியுகம் ஞானயுகமாக சடுதி மாறும்
கனிவேலவன் என் சக்திதான் என்கின்ற உண்மையை
கலியுகத்தார் அரங்கன் வழிஇனிதே உணர்ந்து இணைய
4. இணையவே உலகோர்க்கு ஞானபலம்
இறையருளாக வரமாக கிட்டநேரும்
துணைபட அரங்கனோடு ஆறுமுகன் யான்
தொடர்ந்து வந்து உலகமக்களுக்கு காப்பு தருவேன்
5. தருகவே அருளோடு அறமாக
கருணையோடு தயவாக பெருகி நிற்கும்
ஆறுமுக அரங்கன் என் அவதாரம்
அறிந்து தெளிந்து வருவோர்க்கு அழியாமை உறுதி யாகும்
6. ஆகவே அரங்கனுக்குள் நித்தம்நித்தம்
அற்புதங்கள் யான் நடத்திவர
யுகமக்களே உணர்ந்து தெளிந்து உடன் வாரீர்
உலகமாற்றம் சடுதி நடக்க வகையாகவே
7. ஆகவே அரங்கன் தொடர்புகொண்ட
மக்களுக்கு அழியாமை கிட்டுவதோடு
வரங்கள் கூடி வாழும் காலமே வள்ளல்களையும்
வடிவேலன் என்னையும் காணும் வாய்ப்பு கிட்டும்
8. வாய்ப்பு தந்தேன் அரங்கன் வழி மக்களுக்கு
வழிமொழிந்து உலகோர் தொடர்ந்து வர
மெய்ஞானம் உறுதி உறுதி
மொழிந்திட்ட சுப்ரமணியப்பெருமான் ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—